மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உடுமலைப்பேட்டையில் நடத்தப்பட்ட கொலை நக்சல்பாரிகளால் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. சாதாரணமாக கொலை, கொள்ளை செய்பவர்கள் கூட நக்சல்பாரிகள் என்று சொல்லிக் கொள்வதாகக் குறிப்பிட்டார்கள். அப்படிக் கூறினாலும் அவர்கள் உண்மையிலேயே நக்சல்பாரிகள்தானா அல்லது வேண்டுமென்றே சொல்லிக் கொள்ளுகிறார்களா என்பதை எல்லாம் காவல்துறையினர் சரியாக ஆராய்ந்து முடிவு எடுக்கிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப்: அலுவலகத்தில் வேலை செய்பவர்களிடத்தில் மட்டுமல்லாமல் மாணவர்களிடத்திலும் இந்த இயக்கம் வளர்ந்து பரவிவருகிறது என்பதை அரசு அறியுமா? அப்படிப்பட்ட ஒருவர் வட ஆற்காடு மாவட்டத்தில் ஆசிரியராக நியமிக்கப்பட்டு அதன்பிறகு சஸ்பெண்ட் செய்யப்பட்டார். படித்து வேலை இல்லாதவர்கள், கல்லூரி மாணவர்கள் இதிலே ஈடுபட்டால், காந்திய வழியில், அண்ணா வழியில் போதனைகளை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பூக்களுக்குள்ளே பூ நாகம் இருக்கிறது. அதைப் போல் கல்லூரிகளிலும், மற்ற இடங்களிலும் இந்த நிலைமை உருவாகியிருக்கிறது என்பதை மறுக்கவில்லை. காந்திய வழி, அண்ணா வழி, சமரச சன்மார்க்க வழியில் நாட்டின் எதிர்காலத்தை ஒளி மயம் ஆக்குவதற்காக அவர்களிடையே ஏற்கெனவே பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: தலைவர் அவர்களே, இந்த நக்சல்பாரிகள் என்று சொல்கிறவர்கள் செய்யும் கொலைக்கும் அப்படி அல்லாதவர்கள் செய்யும் கொலைக்கும் சர்க்கார் ஏதாவது வித்தியாசம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கொலை செய்தவர்களை ஆராய்ந்து அந்த வித்தியாசத்தை காவல்துறையினர் கண்டு பிடிக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் நில மறு அளவு, ரீ சர்வே பார்டி, ஆபீஸிலிருந்த ஒரு வேலையாளை இந்த இயக்கத்தில் ஈடுபட்டவர் என்று சொல்லி அரெஸ்ட் செய்து விடுதலை செய்ததுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தனிக் கேள்வி கேட்டால் பதில் தயாரித்துத் தரலாம்.

பல்லடத்தில் சிறு தொழில்

*266 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு தொழில் கார்ப்பரேஷன் மூலம் பல்லடத்தில் சிறு தொழில் ஆரம்பிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.